## 100 நாள் வேலைத்திட்டத்தை அழிக்கத் துடிக்கும் நாசகார ஒன்றிய பா.ஜ.க. அரசு –

# ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து கூட்டணிக் கட்சியினர் கடலெனத் திரண்ட காட்சி!



100 நாள் வேலை திட்டத்தில் அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசையும், ஒத்து ஊதும் அடிமை அதிமுகவையும் கண்டித்து, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, வாணாபுரம் பகண்டை கூட்டுச்சாலையில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர், காங்கிரஸ் பேரியக்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில,மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகளின் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கலந்துகொண்டு, கண்டன உரையாற்றினார், மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய,ஊராட்சி,கிளைக் கழக நிர்வாகிகள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தோழர்கள்,பொதுமக்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.



அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி சார்பாக நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் கலந்துகொண்டு தலைமை தாங்கி கண்டன முழக்கங்களை எழுப்பி எழுச்சியுரையாற்றினார், இந்த ஆர்ப்பாட்டத்தில், மாநில மகளிரணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத் தோழர்கள், கூட்டணி கட்சி தோழர்கள், 100 நாள் வேலை திட்டப் பணியாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றிய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், 100 நாள் வேலை திட்டத்தில் மாற்றம் கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசை கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் கண்டன உரையாற்றினார். உடன் காங்கிரஸ் கே.கிருஷ்ணமூர்த்தி, சி.பி.எம். செல்வம், ம.தி.மு.க. நேதாஜி, விடுதலை சிறுத்தைகள் நா.முத்து, முத்தமிழன், தி.க. அண்ணாதாசன், சி.பி.ஐ. இரா.தங்கராஜ், முஸ்லீம் லீக் மாலிக் இரா. ராஜசேகர், கே.வி.சேகரன், ஆர்.மகேஷ், ஆர்.வி.சேகர், ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, கோ.தனசேகரன், எவரெஸ்ட் நரேஷ்குமார், வி.வெங்கடேசன், ராணி சண்முகம், சுப்பிரமணியன், சாது ஆனந்த், தே.பாண்டியன், கே.வி.அன்பழகன், மதியழகன், நவீன் குமார் உட்ப பலர் உள்ளனர்.



பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பண்ருட்டி நகரம் ,பண்ருட்டி வடக்கு ஒன்றியம் ,தொரப்பாடி பேரூராட்சி சார்பில் , 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் பாஜக அரசையும், ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், பண்ருட்டி நகரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், பண்ருட்டி நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. பண்ருட்டி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சந்தோஷ் குமார், தொரப்பாடி பேரூராட்சி செயலாளர் சுந்தர் வடிவேலு ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். இக்கூட்டத்தில் மாவட்டத் துணை செயலாளர்கள் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், காங்கிரஸ் மணி, சி.பி .எம் .செயற்குழு உதயகுமார், சி.பி.ஐ. ஒன்றிய செயலர் ஞானசேகர், ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் ஷேக் நூர்தீன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட தலைவர் சுரேந்தர், கட்டிட தொழிலாளர் சங்கம் கட்சி மாநிலத் துணைச் செயலாளர் சுப்புராயலு , விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இளைஞர் பாசறை மாவட்ட செயலாளர் வெங்கடசாமி, மக்கள் நீதி மையம் கட்சி கழகச் செயலாளர் முத்து, மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மாவட்ட, ஒன்றிய ,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு திமுக கூட்டணி கட்சி சார்பில் வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்எல்ஏ தலைமையில் பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க.வைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் ஜி.ஆர்.வசந்தவேல், கே.வி.முருகன், ஒன்றிய சேர்மன் சாந்தி இளங்கோவன், வடக்கு மாவட்ட கழக பொருளாளர் வீ.சு.வீரபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விசிக மாவட்ட செயலாளர் அறிவுக்கரசு, சிபிஎம் முன்னாள் மாவட்ட செயலாளர் ஏழுமலை, சிபிஐ மாவட்ட பொருளாளர் வெங்கடேசன் ஆகியோர் துவக்க உரையாற்றினார்கள் கழக நிர்வாகிகள் ஜெகதீசன், மேட்டத்தூர் பழனி, ஏழுமலை, பாஸ்கர், சிபிஎம் ஜெயக்குமார், ஆனந்தராஜ், விசிக அரசூர் இளங்கோவன், வெற்றிமுரசு, களத்தூர் இளங்கோவன் உள்பட ஏராளமான பெண்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் 100நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் பாஜக அரசைக் கண்டித்து திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் சார்பில் திமுக ஒன்றிய செயலாளர் கடற்கரைராஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் ஒன்றிய செயலாளர் முருகேசன், நகர செயலாளர் குருசாமி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிப்பிப்பாறை, ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டையில் மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிய ஒன்றிய அரசின் அறிவிப்பை எதிர்த்தும் துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து முன்னாள் சேர்மன் சுப்பாராஜ் தலைமையில் நகரச் செயலாளர் ஏ.கே.மணி, மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் பாபுஜி, நெசவாளர் அணி பழனிச்சாமி, மாவட்ட தலைமை செயற்குழு சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர் பாலகணேஷ், பொன்ராஜ் மற்றும் மதசார்பற்ற அனைத்து கட்சிகளும் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.